©
தமிழ்நாடு அரசு
2023

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 12] சென்னை, புதன்கிழமை, மார்ச் 22, 2023
பங்குனி 8, சுபகிருது, திருவள்ளுவர் ஆண்டு–2054

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (நிலை) எண். 153, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4–(2)]த் துறை, 20 ஆகஸ்ட் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 17.04.1974–ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்–II பிரிவு–2–இல் 222ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/2163/74ஆம் எண் அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டவாறாக, 17. குளச்சல் (பகுதி) வருவாய் கிராமத்தை உள்ளடக்கிய குளச்சல் உள்ளூர்த் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளை சேர்ப்பதற்கான தனது நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவையாவன:–

"வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்

**ரீத்தாபுரம் பேரூராட்சி**

53. சைமன் காலனி பகுதி
54. ரீத்தாபுரம் பகுதி

**கல்லுக்குட்டம் பேரூராட்சி**

54. ரீத்தாபுரம் பகுதி
55. செம்பொன்விளை பகுதி

**நெய்யூர் பேரூராட்சி**

55. செம்பொன்விளை பகுதி

**சைமன் காலனி கிராம ஊராட்சி**

53. சைமன் காலனி பகுதி"

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளில் வசிக்கும் யாதொரு நபர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம், அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவிற்குள் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனும் பெறப்படுமாயின் அவை, மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரீசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள், அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 154, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [UD4–(2)]த் துறை, 20 ஆகஸ்ட் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 10.04.1974 – ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு–2 இல் 206ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/2001/74–ஆம் எண் அறிவிக்கையில் அறிவிக்கப்பட்டவாறாக, மன்னார்குடி உள்ளூர்த் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களின் பகுதிகளைச் சேர்ப்பதற்கான தனது நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவையாவன:–

"வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்

**மன்னார்குடி வட்டம்**

32. அசேஷம்
31. கோப்பிரளயம்
30. நெடுவக் கோட்டை
12. மேலவாசம்
16. குமரபுரம்
3. மூவாநல்லூர்
4. பாமணி
6. அரவத்தூர்
8. ராமபுரம்
50. சேரங்குளம்"

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவிற்குள் மேற்சொன்ன பகுதிகளில் வசிக்கும் யாதொரு நபர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகார அமைப்பு அல்லது நிறுவனம், அவ்வாறு சேர்ப்பதற்குக் கருதப்பட்டுள்ள பகுதிகள் குறித்த யாதொரு மறுப்புரை அல்லது கருத்துரையை எழுத்து வடிவில் அரசிடம் அளிக்கலாம். மேற்சொன்ன கால அளவிற்குள் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனும் பெறப்படுமாயின் அவை, மேற்சொன்ன சட்டத்தின் 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவிற்கிணங்க மேற்கொண்டும் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். எழுத்துப்பூர்வமான மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள், அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 185, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ 4–(2)]த் துறை, 25 அக்டோபர் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 08.12.2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 835–836 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் II(2)/HOU/723/2010–ஆம் எண் அறிவிக்கையில் ஆறிவிக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மற்றும் ஏமப்பேர் வருவாய் கிராமங்களை உள்ளடக்கிய கள்ளக்குறிச்சி உள்ளூர் திட்டமிடல், பகுதியில், கீழ்க்காணும்வ ருவாய் கிராமங்களைச் சேர்ப்பதற்கான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார். அவ்வாறு செய்வதற்கான இதன் நோக்கம் மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரப்பட்டுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது. அவையாவன:–

"வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்

| | | | |
|---|---|---|---|
| 1. | நல்லாத்தூர் | 16. | பிரிதிமங்கலம் |
| 2. | மட்டிகைக்குறிச்சி | 32. | மடம் |
| 3. | சடையம்பட்டு | 33. | முடியனூர் |
| 4. | குதிரைச்சந்தல் | 34. | குரூர் (வ) & (தெ) |
| 5. | காரனூர் | 35. | மலைகோட்டாலம் |
| 8. | கா. மாமனந்தல் | 36. | விளம்பார் |
| 9. | சிறுவங்கூர் | 37. | தச்சூர் |
| 10. | பெருவங்கூர் | 38. | உலகங்காத்தான் |
| 11. | நீலமங்கலம் | 39. | பங்காரம் |
| 12. | தென்கீரனூர் | 40. | நமச்சிவாயபுரம் |
| 13. | நிறைமதி | 43. | இந்திலி |
| 14. | மாடூர் | 47. | பொற்படாக்குறிச்சி |
| 15. | வீரசோழபுரம் (கி) & (மே) | 119. | ஆலத்தூர் |

| | | | |
|---|---|---|---|
| 120. | திருக்கனங்கூர் | 128 | வாணியந்தல் |
| 121 | பொன்பரப்பட்டு | 129 | தண்டலை (வ) & (தெ) |
| 122 | செம்படாகுறிச்சி | 130 | அணைக்கரைக்கோட்டாலம் |
| 123 | கா. அலம்பலம் | 131 | அகரக்கோட்டாலம் |
| 124 | மோகூர் | 132 | சூலாங்குறிச்சி |
| 125 | சோமண்டார்குடி | 135 | பள்ளிப்பட்டு |
| 126 | மோ. வண்ணஞ்சூர் | 136 | வேளானநந்தல் |
| 127 | அரியபெருமானூர் | 137 | பல்கலச்சேரி |

*[அரசாணை (நிலை) எண். 190, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [நவ4–(2)]த் துறை, 27 அக்டோபர் 2022.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காரைக்குடி வருவாய் உள்ளூர் திட்டமிடல் பகுதியுடன் பின்வரும் வருவாய் கிராமங்களைச் சேர்ப்பதுடன், 27.11.1974 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2 இல் 594ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/5046/74ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தையும் இதனால் மேற்கொள்கிறார். அவ்வாறு செய்வதற்கான இதன் நோக்கம், மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறாக, ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

திருத்தம்

**மேற்சொன்ன அறிவிக்கையில் அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:–**

**"அட்டவணை**

| *தொடர் எண்* | *உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | காரைக்குடி | காரைக்குடி நகராட்சி |
| | | 121. கழனிசாசல் (பகுதி) |
| | | 122. காரைக்குடி (பகுதி) |
| | | 143. அரியங்குடி (பகுதி) |
| | | 144. செக்காலைக்கோட்டை (பகுதி) |
| | | 145. இலுப்பக்குடி (பகுதி) |
| | | 142. செஞ்சை (பகுதி) |
| | | 141. அமராவதி (பகுதி) |
| | | கோட்டையூர் முதல் நிலை பேரூராட்சி |
| | | 47. கல்லாங்குடி கிராமம் |
| | | 11. வேலாங்குடி கிராமம் |
| | | 10. கோட்டையூர் கிராமம் |
| | | திருவேலங்குடி குழு |
| | | 5. திருவேலங்குடி கிராமம் |
| | | சரக்குடி கிராமம் |
| | | 13. கழனிவாசல் கிராமம் (பகுதி) |
| | | 15. காரைக்குடி கிராமம் (பகுதி) |
| | | 43. அரியக்குடி கிராமம் (பகுதி) |
| | | 12. செக்காலைக்கோட்டை கிராமம் (பகுதி) |
| | | 44. இலுப்பக்குடி கிராமம் (பகுதி) |

| தொடர் எண் | உள்ளூர் திட்டமிடல் பகுதியின் பெயர் | வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | 20. செஞ்சை கிராமம் (பகுதி) |
| | | 21. அமராவதி கிராமம் (பகுதி) |
| | | 16. மானகரி கிராமம் |
| | | 14. கோவிலூர் கிராமம்". |

**ஹித்தேஷ் குமார் எஸ். மக்வானா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 5, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி [ந.வ.4(2)]த் துறை, 4 ஜனவரி 2023.]*

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், சீர்காழி உள்ளூர் திட்டமிடல் பகுதியில் பின்வரும் வருவாய் கிராமங்களை சேர்ப்பதுடன், 17.04.1974ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2 இல் 218ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிருவாகத் துறையின் II(2)/RUL/2142/1974 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் மேற்கொள்கிறார். அவ்வாறு செய்வதற்கான இதன் நோக்கம், மேற்சொன்ன சட்டத்தின் 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின் கீழ் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

**மேற்சொன்ன அறிவிக்கையில் அட்டவணைக்குப் பதிலாக, பின்வரும் அட்டவணை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:**

**அட்டவணை**

**“வருவாய் கிராமங்களின் எண் மற்றும் பெயர்**

**சீர்காழி வட்டம்**

45. செம்மங்குடி
47. திட்டை
48. சட்டநாதபுரம்
53. விளந்திடசமுத்திரம்
55. அக்னி
56. நெம்மேலி
46. தில்லைவிடங்கன்

**அபூர்வா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

## அறிவிக்கைகள்

*[அரசாணை (ப) எண். 414, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (J1) த்துறை, 18 ஆகஸ்ட் 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள பின்வரும் வரைவு அறிவிக்கை, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறாக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் இந்த வரைவு அறிவிக்கை தொடர்பாக எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரைகளை அல்லது கருத்துரைகளை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின், அவற்றை சென்னை—600 006 டி.எம்.எஸ். வளாகத்திலுள்ள தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் வாயிலாக, அரசு செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, தலைமைச்செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவு அறிவிக்கை

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 16.05.2018 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2—இல், 436 மற்றும் 437ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/(LE)/459/2018ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் துணி ஆலைகளில் தனியாக அல்லது ஒன்றாகச் சேர்ந்து பணி மேற்கொள்ளப்படுகிற ஆலைகள், நெசவாலைகள், நூற்பாலைகள், முன்வரையற்ற ஆலைகள் உட்பட துணி ஆலைகளில் பஞ்சடிக்கும் அறை, சிக்கெடுத்தல், நூலாக இழுத்தல், கைவிசைச் சட்டங்கள் நூற்றல், நூலிழைத்தல், முறுக்கேற்றுதல், சுற்றுதல், சிப்பம் செய்தல், பாவு போடுதல் போன்று மேற்சொன்ன ஆலைகளில் பல்வேறு செயல்முறைகளிலும் துணி ஆலைகளில் ஏனைய செயல்முறைகளிலும் பணியமர்த்தப்பட்டுள்ள தொழில் பழகுநர்களுக்கு, நாளொன்றுக்கு 324.00 ரூபாயும் (ரூபாய் முந்நூற்று இருபத்து நான்கு மட்டும்) இதன்கீழ் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களில் வகை செய்துள்ளவாறாக அகவிலைப்படியும் என வழங்கத்தக்கக் குறைந்தளவு ஊதிய வீதங்களை இதனால் திருத்தியமைக்கிறார்.

விளக்கங்கள்: (1) மேலே மாற்றியமைக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், கூடுதலாக தொழில் பழகுநர்களுக்கு, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு ரூ.2.00 (ரூபாய் இரண்டு மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழில் பழகுநர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் இடங்களிலெல்லாம் அதே அதிகளவு ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (2ப) எண். 90, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(J1)த்துறை, 31 அக்டோபர் 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 28.02.2018 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்-II, பிரிவு 2-இல் 232 மற்றும் 233ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/189/2018 ஆம் எண் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர் தமிழ்நாடு மாநிலத்தில் வெளுத்தல் அல்லது

சாயமேற்றுதல் அல்லது இரண்டு தொழில்களிலும் பணியமர்த்தப்பட்டுள்ள, கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அவ்விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். மேலும், இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரப்பட்டுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது:—

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

### விவர அட்டவணை

### வெளுத்தல் அல்லது சாயமேற்றுதல் அல்லது இரு தொழில்களிலும் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* | *பணியாளர்கள்/ பணியின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் ரூ.காசு.* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| A. அலுவலகப் பணியாளர்கள் | | (திங்களொன்றுக்கு) |
| (1) | மேலாளர் | 9617.00 |
| (2) | கணக்காளர் | 7157.00 |
| (3) | எழுத்தர் | 6696.00 |
| (4) | கணினி இயக்குபவர் | 7157.00 |
| B. தொழிற்சாலைப் பணியாளர்கள் | | |
| (1) | சாயமேற்றும் பணியாளர் | 9464.00 |
| (2) | கொதிகலன் இயக்குபவர் | 8695.00 |
| (3) | ஆய்வக தொழில்நுட்பப் பணியாளர் | 8234.00 |
| (4) | மேற்பார்வையாளர் | 8234.00 |
| (5) | கொதிகலனுக்கு தீ பற்றவைப்பவர் | 8234.00 |
| (6) | மின் கம்மியர் | 7926.00 |
| (7) | பொருத்துநர் | 7926.00 |
| (8) | இயந்திரத்தை இயக்குபவர் | 7772.00 |
| (9) | ஓட்டுநர் | 7772.00 |
| (10) | உதவியாள் | 6696.00 |
| (11) | காவலாள் | 6696.00 |
| (12) | பெருக்குபவர் | 6696.00 |
| (13) | துப்புரவுப் பணியாளர் | 6696.00 |
| C. வெளுத்தல் மற்றும் சாயமேற்றுதல்-பணியாளர்களால் மேற்கொள்ளப்படுபவை (நூலிழை) (5 கிலோகிராம் கட்டு) | | |
| (I) | அ. நாப்தால் மற்றும் காரம் | 15.56 மிதியல் கூலி மற்றும்3 சுற்றுக்கு |
| | ஆ. நேரடி வண்ணம் | 3.35 (1 சுற்றுக்கு) |
| | இ. தொட்டி வண்ணம் | 8.38 (3 மாற்று மற்றும் 2 இழுவை) |
| (II) | அ. பாதியளவு வெளுத்தல் | 4.79 |
| | ஆ. முழுவதுமாக வெளுத்தல் | 7.77 |
| D. வெளுத்தல் மற்றும் சாயமேற்றும் நிலையான நாரிழை – (5 கிலோகிராம் கட்டு) | | |
| (a) | நாப்தால் வண்ணம் | 11.97 |
| (b) | அடர் வண்ணம் | 15.56 |
| (c) | இளம் வண்ணம் | 15.56 |
| (d) | தொட்டி வண்ணம் | 13.17 |
| E. I. (வெளுத்தல் மட்டும்) நூலிழை (100 கிலோகிராம் கொண்ட சிப்பம் ஒன்றுக்கு) | | |
| (1) | நெப்தால் வண்ணம்<br>தரம் I<br>தரம் II | 538.47<br>538.47 |
| (2) | அடர் மற்றும் இளம் வண்ணம்<br>தரம் I<br>தரம் II | 598.30<br>550.44 |

| தொடர் எண் | பணியாளர்கள்/ பணியின் வகைகள் | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் ரூ.காசு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (3) | தொட்டி வண்ணம்<br>தரம் I<br>தரம் II | <br>550.44<br>538.47 |
| II (சாயமேற்றுதல் மட்டும்) நூலிழை (100 கிலோகிராம் கொண்ட சிப்பம் ஒன்றுக்கு) | | |
| (1). | நாப்தால் வண்ணம்<br>தரம் I<br>தரம் II | <br>837.62<br>801.72 |
| (2). | அடர் மற்றும் இளம் வண்ணம்<br>தரம் I<br>தரம் II | <br>873.52<br>837.62 |
| (3). | தொட்டி வண்ணம்<br>தரம் I<br>தரம் II | 550.44<br>538.47 |
| F. பனியன் துணி மற்றும் நூலிழையை வெளுத்தல் – (5 கிலோகிராம் ஒன்றுக்கு) | | |
| (I) | அ. பனியன் கட்டு ஒன்றுக்கு (20–ஆம் எண் நூலிழை) | 15.56 |
| | ஆ. பனியன் கட்டு ஒன்றுக்கு (40–ஆம் எண் நூலிழை) | 16.75 |
| (II) | துணி – 100 கிலோகிராம் சிப்பம் / பொதியுறை | 350.00 (நாளொன்றுக்கு) |
| G. | இழுவை எந்திரம் (வின்ச்) மூலம் வெளுத்தல் | 296.50 (நாளொன்றுக்கு) |
| H. | முறுக்குதல், காயவைத்தல் மற்றும் கட்டுகளாகக் கட்டுதல் | 6696.00 (திங்களொன்றுக்கு) |
| I. | துண்டுகளை வெளுத்தல் 100 துண்டுகள் கொண்ட கட்டு ஒன்றுக்கு (ஒவ்வொரு துண்டும் 10 மீட்டர்கள்) | 565.50 (நாளொன்றுக்கு |
| J. (வெளுத்தல் மற்றும் சாயமேற்றுதல்) பட்டு | | |
| 1. | வெளுத்தல் | 143.59 (கிலோகிராம் ஒன்றுக்கு) |
| 2. | சாயமேற்றுதல் | 191.46 (கிலோகிராம் ஒன்றுக்கு) |
| (2) வண்ணங்களுக்காக-உடற்பகுதி வண்ணத்திற்காக மட்டும்)-கரைப்பகுதிக்கு-கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 239.32/– கூடுதல் கூலி) | | |
| (3) வண்ணங்களுக்காக—உடற்பகுதி வண்ணத்திற்காக மட்டும்)—கரைப்பகுதிக்கு-கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 239.32/– கூடுதல் கூலி) | | |
| K. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் | | |
| 1. | வேதியியலாளர் | 7157.00 (திங்களொன்றுக்கு) |
| 2. | இயந்திரத் தளவாடத்தை இயக்குபவர் | 7772.00 (திங்களொன்றுக்கு) |
| 3. | உதவியாள் | 6696.00 (திங்களொன்றுக்கு) |
| L. | சுமை ஏற்றுதல் / இறக்குதல் | 6696.00 (திங்களொன்றுக்கு) |
| M. | வளரிளம் பருவத்தினர் (யாதொரு வகையிலான பணிக்காக) | 6388.00 (திங்களொன்றுக்கு |

விளக்கங்கள்:

1. **அகவிலைப்படி:** மேலே நிருணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:–

   (i) அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன்

இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படியானது திங்கள் ஒன்றுக்கு ரூ. 39.65 (முப்பத்தொன்பது ரூபாய் அறுபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) அகவிலைப்படியானது, ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான முந்தைய 12 மாதங்களுக்கான விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து கணக்கிடப்படவேண்டும்.

(iii) அகவிலைப்படிக்கான முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிட திங்கள் ஊதியத்தை 26–ஆல் வகுக்க வேண்டும்.

(4) திங்கள் ஊதியத்தைக் கணக்கிட நாள் ஊதியத்தை 30–ஆல் பெருக்க வேண்டும்.

(5) இங்கு நிருணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே அதிகளவு ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (2ப) எண். 91, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (J1) த்துறை, 31 அக்டோபர் 2022.]*

1948ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 06.06.2018ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்–II, பிரிவு 2–இல், 526–527ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/513/2018ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக் குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள, தமிழ்நாடு மாநிலத்தில் ஊதுவத்தி தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, மேற்சொன்ன விவர அட்டவணையின் (3) நெடும்பத்திக்கு நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறாக முன்னரே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

விவர அட்டவணை

**ஊதுவத்தி தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொ. எண்* (1) | *பணி/பணியாளர்களின் வகைகள்* (2) | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (மாதமொன்றுக்கு)* (3) | | | |
|---|---|---|---|---|---|
| | | *மண்டலம்–A* | *மண்டலம்–B* | *மண்டலம்–C* | *மண்டலம்–D* |
| | | *(i)* | *(ii)* | *(iii)* | *(iv)* |
| | | (ரூ. காசு) | (ரூ. காசு) | (ரூ. காசு) | (ரூ. காசு) |
| I. | தயாரிப்புப் பிரிவு:<br>(1) செப்பமுறா வத்திகளைச் சுற்றுதல் (தொழிற்சாலைகளில்) | 6462.00 | 6355.00 | 6246.00 | 6138.00 |
| | (2) (a) சிப்பம் செய்தல் | 6571.00 | 6462.00 | 6355.00 | 6246.00 |
| | (b) சிப்பம் செய்தல் (வாசனை திரவத்தைத் தெளித்தல் அல்லது வாசனை திரவத்தில் தோய்த்தெடுத்தல் உட்பட) | 6982.00 | 6851.00 | 6733.00 | 6614.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| II. | நிருவாகப் பிரிவு: | | | | |
| | (1) தட்டச்சர் | 6517.00 | 6410.00 | 6299.00 | 6193.00 |
| | (2) எழுத்தர் | 6484.00 | 6375.00 | 6268.00 | 6159.00 |
| | (3) மேற்பார்வையாளர் | 6571.00 | 6462.00 | 6355.00 | 6246.00 |
| | (4) மேலாளர் | 7004.00 | 6788.00 | 6491.00 | 6571.00 |
| | (5) ஓட்டுநர் (மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தில் 'தொழிலாளர்' என்ற பொருள் விளக்கத்தின் கீழ் வருகிற ஓட்டுநர்கள் தவிர) | 6788.00 | 6680.00 | 6571.00 | 6462.00 |
| | (6) காவலாள் அல்லது அலுவலக உதவியாளர் அல்லது சிற்றேவலர் அல்லது ஏவலாள் | 6138.00 | 6029.00 | 5977.00 | 5911.00 |
| III. | விற்பனைப் பிரிவு:<br>(a) விற்பனைப் பணியாளர் | 6571.00 | 6138.00 | 5921.00 | 5705.00 |
| | (b) உதவி விற்பனைப் பணியாளர் | 6138.00 | 6029.00 | 5977.00 | 5921.00 |
| IV. | ஏனைய வகையினர்: மேற்சொன்னவற்றின் கீழ் வராத ஏனைய பணியாளர் வகையினர் | 6138.00 | 6029.00 | 5977.00 | 5921.00 |
| V. | செப்பமுறா வத்திகள் சுற்றுதல் (வீட்டிலிருந்து வேலை செய்வோருக்கு):<br>(a) 6'' வரை செப்பமுறா 1000 வத்திகளைச் சுற்றுதல் | 46.71 | 45.40 | 44.06 | 42.71 |
| | (b) 6'' மேற்பட்ட செப்பமுறா 1000 வத்திகளைச் சுற்றுதல் | 57.39 | 56.07 | 54.73 | 53.39 |

**விளக்கங்கள்:–** மண்டலங்களின் வகைப்பாடு வருமாறு :–

மண்டலம்–A : அனைத்து மாநகராட்சிகள்

மண்டலம்–B : அனைத்து நகராட்சிகள்

மண்டலம்–C : அனைத்து நகரியங்கள், பேரூராட்சிகள் மற்றும் பாளையங்கள்

மண்டலம்–D : மண்டலம் A,B மற்றும் C–இல் வராத ஏனைய பகுதிகள்.

1. **அகவிலைப்படி:** (தொழிலகப் பணியாளர்களுக்கு இணையாக வீட்டிலிருந்து வத்தி சுற்றுகிற பணியாளர்களுக்கு) 1000 வத்திகளைச் சுற்றுவதற்கு ரூ.42.84 என்ற வீதத்தில் அகவிலைப்படி கணக்கீடு செய்யப்படும். இருப்பினும், நாளொன்றில் சுற்றப்படுகிற வத்திகளின் எண்ணிக்கை 3000–க்கு மேற்பட்டாலும் கூட அதிகளவு அகவிலைப்படி, ரூ.128.52–க்கு மேற்படக்கூடாது.

2. **அகவிலைப்படி:** (தொழிலகப் பணியாளர்களுக்கு):–

   (i) அகவிலைப்படி, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ.35.43 (முப்பத்தைந்து ரூபாய் நாற்பத்து மூன்று காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

   (ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) நுகர்வோர் விலைப்புள்ளிகளி சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(iii) முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளிக் குறியீட்டு எண்ணின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(iv) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாத ஊதியத்தை 26—ஆல் வகுக்க வேண்டும்.

(v) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(vi) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே அதிகளவு ஊதியமே தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

*[அரசாணை (நிலை) எண். 148, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (I1)த் துறை, 10 நவம்பர் 2022.]*

தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு, உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகளை முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 6 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) மற்றும் (5) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தின் அரசு பிரதிநிதியாகவும் அதன் தலைவராகவும் இதனால் நியமனம் செய்கிறார்.

**முகமது நசிமுத்தின்,**
*அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை,*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட